<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>

**Trust O.P.46/2016**

2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் தேதி PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.என்.உமா மகேஸ்வரி, எம்.ஏ., எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **வெங்கடசுப்பிரமணியம் என்ற R.V.S. மணியன் PW1** | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**முதல் விசாரணை ..**

நான் இம்மனுவின் முதல் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். 05.01.1970 தேதியிட்ட டிரஸ்ட் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 14.09.1992 தேதியிட்ட அதே டிரஸ்டிற்கான சப்ளிமெண்ட் ஆவணம் **ம.சா.ஆ.2** ஆகும். அதே தேதியில் ஏற்பட்ட வாகினி டிரஸ்ட் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.3** ஆகும். 01.01.1973 ம் தேதி ஆர்.பாலசுப்பிரமணியம் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.4** ஆகும். 30.05.1951 அன்று வெங்கட சுப்பா அய்யர் ஏற்படுத்திய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆகும். அதே தேதியில் சங்கர நாராயண அய்யர் ஏற்படுத்திய கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆகும்.

**(ம.சா.ஆ.1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது).**

**ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**